**மதுரை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**

(07-11-2015 – 11-11-2015)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 06-11-2015

**கடந்த கால வானிலை 03-11-2015 முதல் 05-11-2015 வரை**

| **காரணிகள்** | **கடந்த கால வானிலை** |
|---|---|
| மழை (மி.மீ) | 66.8 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 30-33 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 23 |
| மேக மூட்டம் | 4-7 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 63-87 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி) | 3-6 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 11-11-2015 - 8.30 மணி நேரம் வரை**

| **காரணிகள்** | **07.11.15** | **08.11.15** | **09.11.15** | **10.11.15** | **11.11.15** |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 12 | 14 | 12 | 8 | 2 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 33 | 33 | 33 | 34 | 34 |
| குறைந்த பட்ச வெப்பநிலை(செ) | 23 | 23 | 23 | 23 | 23 |
| மேக மூட்டம் | 7 | 7 | 7 | 6 | 6 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 87 | 87 | 87 | 85 | 84 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 76 | 76 | 76 | 72 | 70 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி) | 4 | 4 | 4 | 4 | 4 |
| காற்றின் திசை | கிழக்கு தென்கிழக்கு | கிழக்கு தென்கிழக்கு | கிழக்கு தென்கிழக்கு | கிழக்கு தென்கிழக்கு | கிழக்கு தென்கிழக்கு |

**குறுஞ்செய்தி**

- வரும் ஐந்து நாட்களுக்கு லேசான மற்றும் மிதமான மழை அனைத்து இடங்களிலும் வர வாய்ப்புள்ளது. வானம் மேகமூட்டத்துடன் குளிர்ந்தும் காணப்படும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்: நெல்**

**பருவம்: நெல்-முதிர்ச்சி பருவம் மற்றும் அறுவடை பருவம்**

- விவசாயிகள் விளை நிலத்தில் ஒரு பகுதியை மட்டும் மழை நீரை சேமித்து வைப்பதற்கு முறையான ஏற்பாடுகள் செய்ய அறிவுறுத்தப்படுகின்றன. ஏனெனில் இந்த மழை நீரை பயன்படுத்தி வறட்சி காலங்களில் பயிர்களுக்கு பாசனம் செய்யவதற்குப் பயன்படுத்த முடியும்.
- நெல்லில் குலை நோயினைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு ஹனோசான் 200 மி.லி. அல்லது டிரைசைகலசோல் 200 கிராம் தெளிக்கவும். முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஏக்கருக்கு சூடோமோனோஸ் ப்ளுரசன்ஸ் 500 கிராம் பவுடரை 200 மி.லி. தண்ணீரில் கலந்து மாலை வேளையில் தெளிக்கவும்.
- நெற்பயிரில் பழுப்பு நிற நோய் காணபட்டால். அதனைக் கட்டுப்படுத்த விவசாயிகள் 10-15 நாட்கள் இடைவெளியில் 2-3 முறை மேன்கோசெப் 2 கிராம்/ லிட்டர் தெளிக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றன.
- நெற்பயிரில் பூக்கும் பருவத்தில் கருப்பு நாவாய் பூச்சி தாக்குதல் பரவலாக தென்படுக்கிறது. இதனைக் கட்டுப்படுத்த புரோப்பனொபாஸ் 50 இ.சி. மருந்தினை ஏக்கருக்கு 400மில்லி என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.